بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/03/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ 23 மார்ச்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஞானமிக்க கூற்றுகளின் ஒளியில் வாக்களிக்கபட்ட மஸீஹின் வருகை பற்றிய குறிப்பு**
**✪ பாக்கிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்காகவும் முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆவுக்கான கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

நாளை மறுநாள் மார்ச் 23 ஆம் தேதி ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் மார்ச் 23 ஆம் தேதிக்கு பெரும் முக்கியத்துவம் உள்ளது. ஏனென்றால் 1889 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பைஅத்தை ஆரம்பித்து ஜமாஅத்திற்கான அடித்தளத்தை வைத்தார்கள். அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கும் முற்றிலும் ஏற்பவே அன்னாருடைய வருகை இருந்தது. அப்போது இஸ்லாத்தின் கப்பல் மிகவும் தத்தளித்துக் கொண்டிருந்தது. இப்பொழுதும் கூட மார்க்க ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உலக ரீதியாகவும் முஸ்லிம்களின் நிலையைப் பார்க்கும் போது அது எடுத்துக் கூறும் அளவுக்கு ஒன்றும் இல்லை. பல்வேறு முஸ்லிம் நாடுகள் எண்ணெய் வளத்தின் காரணமாக செல்வ செழிப்பில் உள்ளன. ஆனால் அவர்களின் முக்கியத்துவமும், கண்ணியமும் முற்றிலும் வீணாகிப் போய் உள்ளது. எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பைஅத் வாங்கிய நேரத்தில் இஸ்லாத்தின் நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அதைக் கண்டு அன்னாரது உள்ளம் இரத்தக்கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. இஸ்லாத்தின் மீது கிறிஸ்தவத்தின் சார்பாக தொடர்ச்சியான தாக்குதல் நடத்தப்பட்டு கொண்டிருந்தது. ஆனால் அதற்கு பதில் கொடுக்கக் கூடியவர் யாரும் இருக்கவில்லை. முஸ்லிம் ஆலிம்களும் அப்போது அஞ்சிக் கொண்டிருந்தனர். எந்த அளவுக்கென்றால், இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு விலகி கிறிஸ்தவத்தின் மடியில் விழுந்து கொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்களின் நிலை இவ்வாறானதாக இருந்தபோது, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள்தான் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப எழுந்து நின்றார்கள். இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக அல்லாஹ்வுடைய வீரராக தமது பங்களிப்பை வழங்கினார்கள். அப்போது இந்தியாவில் இருந்த அனைத்து மார்க்கங்களும் இஸ்லாத்தின் மீதும் இஸ்லாத்தினுடைய தோற்றுனர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் எழுத்துக்களின் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் அசுத்தமான முறையில் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இருந்த இந்த வேதனையின் காரணமாக அம்மக்களுக்கு பதில் அளிக்கும் விதமாக பைஅத் வாங்குவதற்கு முன்பே அன்னார் அசாதாரமான ஒரு நூலை எழுதினார்கள். பராஹீனே

அஹ்மதிய்யா என்ற பெயரில் அது அறியப்படுகின்றது. அதில் அன்னார் எதிரிகளுக்கும், இஸ்லாத்தின் எதிராளிகளுக்கும் மூக்கு உடைபடும் அளவுக்கு பதில் கொடுத்தார்கள்.

திருக்குர்ஆன் இறை வேதம் என்பதற்கும் ஈடு இணையற்ற வேதம் என்பதற்கும், பெருமானார் (ஸல்) அவர்கள் உண்மையான இறுதி நபி என்பதற்கும் மறுக்க இயலாத சான்றுகளை அதில் அன்னார் எடுத்து வைத்தார்கள். அத்துடன், தாம் எடுத்து வைக்கும் இந்த சான்றுகளை எவர் மறுத்து காட்டுகிறாரோ அவருக்கு சவால் விடுத்தவாறு, இந்த சான்றுகளில் மூன்றில் ஒரு பகுதியை அல்லது நான்கில் ஒரு பகுதியை அல்லது ஐந்தில் ஒரு பகுதியை யாராவது மறுத்துக் காட்டினால் நான் அவருக்கு பத்தாயிரம் ரூபாய் வெகுமதியாக வழங்குவேன் என்றும் கூறினார்கள். அது அக்காலத்தில் மிகப்பெரும் தொகையாக இருந்தது. அன்னார் இவ்வாறு அறிவித்தபோது இவ்வாறு நூல்களை வெளியிட்ட போது, இஸ்லாம் உறுதியான ஒரு மார்க்கம் ஆகும்; இறுதி மார்க்கம் ஆகும்; நாம் கவலைப்பட தேவையில்லை; (பிற) மக்களைக் கண்டு பயப்படத் தேவையில்லை என்று அப்போது முஸ்லிம்களுக்கு தைரியம் வந்தது. ஆலிம்களும்கூட அன்னாரை மக்கள் மிகவும் புகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்திற்கு செய்த இந்த தொண்டின் காரணமாக மக்கள் அன்னாரிடம், தாங்கள் எங்களிடமிருந்து பைஅத் வாங்குங்கள் என்றும் கூறினார்கள். ஆனால் அப்போது அன்னாருக்கு அல்லாஹ்விடமிருந்து கட்டளை வழங்கப்பட்டிருக்கவில்லை. அல்லாஹ்விடமிருந்து கட்டளை கிடைத்த பிறகு அன்னார் பைஅத் வாங்கினார்கள். பிறகு அல்லாஹ் அன்னாரிடம், நீர் தாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி என்றும் அறிவித்து விடுவீராக என்றும் கூறினான். பைஅத் வாங்குவதற்கு முன்பு டிசம்பர் 1888 ஆம் ஆண்டில் தப்லீக் எனும் பெயரில் அன்னார் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதில் அன்னார் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு பொதுவாகவும் எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு குறிப்பாகவும் நான் இந்த இடத்தில் இன்னொரு தூதுச் செய்தியையும் எட்ட வைக்கின்றேன். அது என்னவென்றால், எவர்கள் உண்மையை தேடுகிறார்களோ அவர்கள் உண்மை, நம்பிக்கை, உண்மையான ஈமான், தூய்மை, இறைவன் மீதான நேசம் ஆகிய இரகசியத்தை கற்றுக் கொள்வதற்காகவும் அசுத்தமான வாழ்வு மற்றும் அறிவீனமான துரோகம்மிக்க வாழ்வை விட்டுவிடுவதற்காகவும் என்னிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. ஆகவே, எவர்கள் தமது உள்ளத்தில் ஓரளவுக்கு இந்த ஆற்றலை கொண்டிருக்கிறார்களோ அவர்கள் என்னிடம் வருவது அவசியமாகும். இது தொடர்பான இல்ஹாம் என்னவென்றால், ‘நீர் இந்த தொண்டுக்காக உறுதி கொண்டு விட்டால் பிறகு இறைவன் மீது நம்பிக்கை வைப்பீராக. மேலும் எமது கண்களுக்கு முன்னால் எமது வஹீக்கு ஏற்ப கப்பலை உருவாக்குவீராக. எவர்கள் உம்மிடம் பைஅத் செய்வார்களோ அவர்கள் உம்மிடம் கிடையாது மாறாக இறைவனிடம் பைஅத் செய்கிறார்கள்.’

பிறகு, அல்லாஹ் பூமியின் அடையாளங்களையும் வானத்தின் அடையாளங்களையும் காட்டினான். அதில் குறிப்பாக சூரிய சந்திர கிரகணம் எனும் அடையாளமும் அடங்கும். இதைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்போது, எனது மஹ்தியின் வருகைக்கான குறிப்பான அடையாளங்களுள் ஒன்று, ரமலான் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் இந்த கிரகணங்கள் ஏற்படும் என்றார்கள். 1894 ஆம் ஆண்டில் கிழக்கிலும் 1895 ஆம் ஆண்டில் மேற்கிலும் இந்த கிரகணங்கள் ஏற்பட்டன. நல்லியல்பு கொண்ட பல மக்கள் இந்த அடையாளத்தை கண்டு அன்னாரை ஏற்றுக் கொண்டார்கள்.

இங்கு இதனோடு தொடர்புடைய இன்னொரு விஷயத்தையும் நான் கூறிக் கொள்கிறேன்; இந்த ரமலானிலும் சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்படப் போகின்றன.

மேலும் அவை இதே தேதிகளில்தான் நிகழும். இனி வரக்கூடிய காலத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட சூரிய சந்திர கிரகணம் அன்னாருடைய வாதத்திற்கு பிறகு ஏற்பட்டதாகும். அதற்கென்று தனி முக்கியத்துவம் உள்ளது. அன்னார் இறைவனிடம் ஓர் அத்தாட்சியையும் அடையாளத்தையும் வேண்டினார்கள். பிறகு அல்லாஹ் அடையாளத்தை வெளிப்படுத்தினான். இன்றைய நாட்களில் ஏற்படும் சூரிய சந்திர கிரகணங்களையும் சில அஹ்மதிகள் அடையாளம் என்று கருதுகிறார்கள். இதை அல்லாஹ்வே நன்கறிவான். எவ்வாறிருப்பினும், இதை அடையாளம் என்று கருதினாலும்கூட இது 135, 136 ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட வாதத்தின் தொடர்ச்சியாகவே கருதப்படும்.

அன்னார் 1889 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி தக்மீலே தப்லீக் (அதாவது தப்லீகை முழுமைப்படுத்துதல்) என்ற பெயரில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதில் பைஅத்துடைய 10 நிபந்தனைகளை குறிப்பிட்டார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பைஅத்தின் 10 நிபந்தனைகள் உள்ளதை நாம் அறிவோம். அஹ்மதியாவதற்கு அவற்றின்படி செயல்படுவதும், உள்ளத்தாலும் உயிராலும் அதை ஏற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

*ஹுஸூர் அவர்கள் பைஅத் நிபந்தனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:*

இந்த நிபந்தனைகளின்படி பல கலப்பற்ற மக்கள் பைஅத் செய்தார்கள். இன்றுவரை இதே நிபந்தனைகளில்தான் பைஅத் செய்து வருகிறார்கள். நாம் இவ்விஷயங்கள்படி செயல்படுகிறோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்! அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கலப்பற்ற மக்களின் பெரும் எண்ணிக்கை உள்ளது. அவர்கள் இதன்படி செயல்படவும் செய்கிறார்கள். பிறகு உயிர், செல்வம், நேரம், கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்வதற்கும், மார்க்கத்தின் கண்ணியத்தை நிலைபெறச் செய்யவும், இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைப்பதற்கும் இயன்ற அளவு முயற்சி செய்ய ஆயத்தமாகவும் உள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உள்ளத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு நேசம் இருந்ததென்றால் அதை அன்னாருடைய ஒரு மேற்கோள் இவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறது. அன்னார் கூறுகிறார்கள்:**

“அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது (ஸல்) என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருள்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) இந்த இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத்தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. பிரித்தறியப்பட வேண்டிய முறையில் அவருடைய உயர் பதவி பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். உலகிலிருந்து மறைந்த அந்த ஏகத்துவத்தை (தவ்ஹீதை) மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும், முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அவரே அனைத்து அருள்களின் தலையூற்று ஆவார். எவர் ஒருவர் அவருடைய அருளை விட்டு விலகி இருந்து ஏதேனும் சிறப்புமிக்க வாதம் செய்வாரோ, அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் அருளை விட்டு விலகி ஏதேனும் நன்மையைக்

குறித்து வாதிப்பாரோ அவர் மனிதர் கிடையாது; மாறாக ஷைத்தானின் சந்ததி ஆவார். ஏனென்றால் ஒவ்வொரு சிறப்பின் திறவுகோலும் அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளது."

எனவே இந்த விஷயங்களின் காரணமாக, ஹஸ்ரத் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீது கொண்ட இந்த நேசத்தின் காரணமாக அல்லாஹ் அன்னாரை தோன்றச் செய்தான். இந்த அன்பு நேசத்தின் காரணமாகவே நான் உமக்கு இந்த அந்தஸ்தையும் வழங்குகின்றேன். நீர் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியும் ஆவீர் என்ற இந்த அறிவிப்பை செய்து விடுவீராக என்று கூறினான். இஸ்லாத்தின் மறுமலர்ச்சி தொடர்பாக வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. நான் அதை இன்று நிறைவேற்றுகிறேன்; உம்மிடத்தில் இந்த பணியை ஒப்படைக்கிறேன் என்று அல்லாஹ் கூறினான்.

பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதற்கான உரிமையையும் நன்கு நிறைவேற்றினார்கள். அன்னார் தம் ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகிறார்கள்: "வாக்களிக்கப்பட்ட மஸீஹுடன் சஹாபிகளைப் போன்ற மக்கள் இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான்."

ஆகவே, அல்லாஹ்வுடைய கூற்று இவ்வாறு இருக்கும் போது எவர்கள் அன்னாருடைய பைஅத்தில் வந்திருக்கிறார்களோ, எவர்கள் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரை ஒளிபெறச் செய்வோம்; இஸ்லாத்தின் பெயரை ஒளிபெறச் செய்வோம்; இஸ்லாத்தின் தப்லீகை உலகின் எல்லைகள் வரை எட்டச் செய்வோம் என்று உறுதிமொழி வழங்கி இருக்கிறார்களோ அவர்கள் சஹாபிகளின் பண்புகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதைப் பற்றி விவரித்தவாறு இன்னோர் இடத்தில் அன்னார் கூறுகிறார்கள்:

நம்முடைய முழுமையான வழிகாட்டியான ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸஹாபிகள் தமது இறைவனுக்காகவும் தூதருக்காகவும் என்னவெல்லாம் உயிர் தியாகங்கள் செய்தார்கள்! இவ்வாறு தியாகங்கள் செய்யக்கூடியவர்களாக அவர்களை மாற்றியது எது? அது, இறைவன் மீது கொண்ட உண்மையான நேசத்தின் ஆர்வம் ஆகும். அதன் கதிர்கள் அவர்களின் உள்ளங்களில் விழுந்தன. உள்ளத்தை தூய்மைப்படுத்தும் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையை எந்த ஒரு நபியுடனும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தாலும் அன்னாருடைய போதனைக்கு இணையான ஒன்றை எங்கும் காண முடியாது! இது பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் அந்தஸ்தாக இருந்தது. அவர்களிடத்தில் காணப்பட்ட பரஸ்பர அன்பு நேசத்தின் காட்சியை திருக்குர்ஆன் இரண்டு சொற்றொடர்களில் எடுத்துக் கூறிவிட்டது. 'தங்க மலையைக் கொடுத்தாலும் கூட அவர்களிடத்தில் காணப்படும் இந்த அன்பு நேசம் ஒருபோதும் உருவாகி இருக்காது.'

நீங்கள் இவ்வாறு உள்ளீர்களா என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் கேட்கிறார்கள். ஸஹாபிகளோ தம் உயிரையும் செல்வத்தையும் இறை வழியில் கொடுத்து விட்டார்கள். நம் மீது இந்த அளவு கடுமை கிடையாது! அதாவது போர்கள் கிடையாது. ஆகவே நமக்காக தியாகங்களின் சில சந்தர்ப்பங்களை அல்லாஹ் வழங்கியிருக்கிறான் என்றால் அதிலிருந்து நாம் பயனடைய வேண்டும்.

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு கூறிய சில அறிவுரைகளை ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்தவாறு கூறினார்கள்;*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனை கதையாக கருதாமல் நீங்கள் அதை ஓதுங்கள்.

அன்னார் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்: "மக்கள் எந்த அளவு இனிய குரலில் திருக்குர்ஆனை ஓதுகிறார்கள் என பாருங்கள்! ஆனால் அது அவர்களின் தொண்டையை விட்டு கீழே இறங்குவதில்லை. திருக்குர்ஆனுடைய இன்னொரு பெயர் திக்ர் (அதாவது, நினைவூட்டக்கூடியது) ஆகும். மனிதனுக்குள் ஒளிந்திருக்கும்,

மறக்கடிக்கப்பட்டிருக்கும் உண்மைகளையும், நம்பிக்கைகளையும் நினைவூட்டுவதற்காக அது வந்துள்ளது. திருக்குர்ஆன் இக்காலத்திற்கும் திக்ர் ஆகும். இதை கற்றுக் கொடுப்பதற்காக இக்காலத்தில் வானில் இருந்து ஓர் ஆசிரியர் வந்துள்ளார். அவர் وَّاٰخَرِیۡنَ مِنۡهُمۡ لَمَّا یَلۡحَقُوۡا بِهِمۡ 'மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் அவரை எழுப்புவான்' என்பதை உண்மைப்படுத்தக் கூடியவராக இன்று இருக்கிறார். இப்பொழுது நம்முடைய எதிரிகள், நம்முடைய எதிரிகளாக இருப்பதுடன் அல்லாஹ்வுடைய வாக்குறுதிகளுக்கு கண்ணியமளிக்காதவர்களாகவும் உள்ளார்கள். எங்களுக்கு குர்ஆன் தெரியும் என்று அவர்கள் வாதிக்கிறார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டையை விட்டு கீழே இறங்குவதில்லை! பரிதாபம் என்னவென்றால் ஒருவர் அறிவுரை கூறுபவராக அவர்களுக்கு புரிய வைக்க விரும்பினால் அவர்கள் புரிந்து கொள்வதற்கு முயற்சிப்பதில்லை. பொறுமை மற்றும் நல்லெண்ணத்தை மேற்கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆனால் இவர்களோ எதிர்க்க மட்டுமே விரும்புகின்றனர். இப்பொழுது இஸ்லாத்தைத்தவிர எந்தவொரு மார்க்கமும் மக்களுக்கு வாழ்வை அளிக்க இயலாது. இறைவன் எந்த ஒரு வேலையையும் வழிவகை இன்றி செய்வதில்லை. அந்த வழிவகை நமக்கு தென்பட்டாலும் சரி தென்படவில்லை என்றாலும் சரி! புரிந்தாலும் சரி புரியவில்லை என்றாலும் சரி!

முந்தைய காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பி ஒளியை வழங்கியது போன்று இக்காலத்தில் இறைவன் என்னை அனுப்பி வைத்திருக்கிறான். நான் அல்லாஹ்வின் சார்பாக வந்துள்ளேன். விரும்பினால் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லை என்றால் வேண்டாம். அது உங்களுடைய விருப்பமாகும். இறுதி காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கைகளால் ஏற்பட வேண்டும் என்று இறைவன் விரும்பியுள்ளான். ஆகவேதான் வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு சிலுவையை முறிப்பவர் என்று பெயர் சூட்டியுள்ளான்."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை இறைவன் அனுப்பி வைத்த போது கிறிஸ்தவத்தின் குழப்பம் எந்த அளவுக்கு வலுப்பெற்றிருந்தது என்றால் அது போன்று முந்தைய காலங்களில் இருக்கவில்லை. அந்த குழப்பத்தின் போது சிலுவையை முறிக்கக் கூடியவரை தோன்றச் செய்வதை இறை தன்மானம் எதிர்பார்க்காதா என்ன? ஆகவேதான் அவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்பி வைத்தான்.

இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பணியை முன்னெடுத்துச் செல்வதும், பெருமானார் (ஸல்), இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்களுக்கு சான்றுடன் பதில் அளிப்பதும், இக்குழப்பத்தின் தலையை நசுக்குவதும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுடைய ஜமாஅத்தின் பணியாக உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மைத்துவம் உலகில் பரவ வேண்டியதிருந்தது; பரவி விடும் என்பது இறைவனுடைய வாக்குறுதியாகும். அதை நம்மவர்கள் எதிர்த்தாலும் அல்லது அந்நியர்கள் எதிர்த்தாலும் அவர்களின் எதிர்ப்புகள் இறுதியில் தோல்வி அடைந்து விடும்.

எங்களிடத்தில் இஸ்லாத்திற்கு எதிராக என்ன விஷயம் உள்ளது? லாயிலாஹ இல்லல்லாஹ் என்று நாங்கள் கூறுகிறோம்; தொழுகைகளையும் தொழுகிறோம்; நோன்புகளின் நாட்களில் நோன்பை வைக்கிறோம்; ஸகாத்தும் கொடுக்கிறோம். இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஏன் வந்தார் என்று மக்கள் கேட்கிறார்கள். இதற்கான பதிலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களே கொடுத்துள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: "உங்களுடைய நிலையே இதற்கான பதிலாகும். உங்களுடைய செயல்கள் நற்செயல்கள் என்றால் அதற்கான விளைவுகள் ஏன் வெளிப்படுவதில்லை. உங்களின் அனைத்து செயல்களும் நற்செயலாக இல்லை. மாறாக அவை வெறும் மேலோட்டாகவே உள்ளது. சத்து இல்லாத வெறும் கூடாக மட்டுமே உள்ளது."

நாங்கள் வீழ்ச்சியில் உள்ளோம். எங்களுக்கு உதவி செய்ய ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டும் என்று முஸ்லிம்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: “நம்முடைய இந்த எதிரிகளும்கூட ஏதேனும் வகையில் நம்முடைய பணியாளர்கள்தான். நம்முடைய விஷயத்தை கிழக்கிலும் மேற்கிலும் கொண்டு சேர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பின் காரணமாகவும் தூதுச் செய்தி சென்றடைந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தப்லீகிற்கு மிகப்பெரும் வழிமுறையாக அவர்களின் எதிர்ப்பு உள்ளது. என்னை பார்த்து இவர் கடை விரித்துள்ளார் என்று கூறுகிறார்கள். நான் எந்த கடையும் விரிக்கவில்லை. ஆம்! யாராவது (இதை) வியாபாரம் என்று அழைக்க விரும்பினால், இது மார்க்க வியாபாரம் (என்று புரிந்து கொள்ளட்டும்). உலக விவகாரங்களைப் பொறுத்தவரை எமது உதாரணம் இறந்த மனிதனைப் போன்றதாகும். நம்முடைய வேலை பித்அத்களிலிருந்து மார்க்கத்தை காப்பாற்றுவதாகும். இஸ்லாத்தின் உண்மையையும் பிற மார்க்கங்களின் உண்மையையும் வெளிப்படுத்துவதாகும்.”

இறைவன் திருக்குர்ஆனையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் ஓர் அருளாக அனுப்பி வைத்துள்ளான். ரமலானின் நாட்களில் திருக்குர்ஆனை ஓதி, புரிந்து இஸ்லாமிய போதனையை தமதாக்கி உலகில் அதிகமான அளவில் அதை பிரச்சாரம் செய்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மிஷனை முன்னே கொண்டு செல்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இறுதியில் நான் பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆவுக்காக கூறிக் கொள்கிறேன்; அல்லாஹ் அவர்களின் சூழ்நிலைகளில் எளிதை உருவாக்குவானாக. தற்போது எதிரிகள் முழுமையான முறையில் அழுத்தம் கொடுக்கிறார்கள். எல்லா விதத்திலும் துன்பம் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு என்னவெல்லாம் சாக்கு போக்குகள் கிடைக்கின்றனவோ அதைக் கொண்டு அஹ்மதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாக உள்ளது. அல்லாஹ் அந்த (அஹ்மதிகள்) அனைவரையும் பாதுகாப்பானாக!

பொதுவாக முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அறிவையும் புரிதலையும் வழங்குவானாக. அவர்களின் சூழ்நிலையை மேம்படுத்துவானாக. அவர்கள் மீது கருணை காட்டுவானாக! பாலஸ்தீனத்து முஸ்லிம்கள் மீது மீண்டும் அநீதியின் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது. அல்லாஹ் அவர்களையும் இந்த அநீதிலிருந்து பாதுகாப்பானாக. அவர்கள் மீது கருணை காட்டுவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)